கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல. / මගේ අංකය / My No. NP/03/01/02/06 உமது இல / ඔබේ අංකය / Your No. திகதி / දිනය / Date 28.05.2015

**சுற்று நிருப இல: 2015/06**

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், மற்றும்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்.

## அதிபர் வெற்றிடம் நிரப்புதல்

இச்சுற்றுநிருபம் 01.06.2015 இல் இருந்து அமுலுக்கு வருகின்றது. எமது 2008/04 ஆம் இலக்க சுற்றுநிருபம் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

**<u>நியமன நிபந்தனைகள்</u>**

1. தங்கள் வலயத்திலுள்ள மாகாணப் பாடசாலைகளில் ஓய்வு பெறல் காரணமாக அதிபர் வெற்றிடம் ஏற்படவுள்ள திகதிக்கு மூன்று (03) மாதங்களுக்கு முன்பதாக அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. விசேட சந்தர்ப்பங்களில் வெற்றிடங்களை மிக விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கீழே தரப்பட்ட நியமன நிபந்தனைகளுக்கமைய நேர்முகப் பரீட்சை ஒன்றினை நடாத்தி இதனடிப்படையில் பொருத்தமான அதிபர் ஒருவர் நேர்முகத் தேர்வுக் குழுவால் சிபார்சு செய்யப்படல் வேண்டும்.
4. இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த அதிபர் ஒருவரை நியமிக்க முடியாத சந்தர்ப்பத்தில் கடமைகளை கவனிக்கும் அடிப்படையில் தகுதியான சிரேஷ்ட ஆசிரியர்களை நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் கடமை நிறைவேற்றும் அதிபர்கள் நியமனம் 2015.06.01 ஆம் திகதிக்கு பின்பு வழங்கப்படமுடியாது.

செயலாளர் / ලේකම් / Secretary 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office 021-3202704 (Admn.) 021-3202568 (Dev.) 021-3202281 (Plan.) 021-3202309 (Acct.) 021-7390665 (DSW)
தொலைநகலி / ෆැක්ස් / Fax 021-2220794

5.பாடசாலைகளின் தரத்திற்கு ஏற்ப அதிபர் தரம் பின்வருமாறு அமையும்.

| **பாடசாலை வகை** | **அதிபர் தரம்** |
|---|---|
| 1 AB/(Super) | இ.க.நி.சே வகுப்பு I,II,III (சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்)<br>இ.அ.சே.வகுப்பு1(பட்டதாரிகளாக இருக்க வேண்டும்) |
| 1 AB/ 1C | இ.அ.சே. வகுப்பு 1 |
| தரம் II பாடசாலை | இ.அ.சே. வகுப்பு 2 |
| தரம் III பாடசாலை | இ.அ.சே. வகுப்பு 3 |

06. இலங்கை கல்வி நிர்வாக சேவை/இலங்கை அதிபர் சேவை வகுப்பு, சேவைமூப்பு என்பவற்றின் வரிசைப்படி முன்னுரிமை அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

07. நியமனம் பெறும் அதிபர்கள் விண்ணப்ப முடிவு திகதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட காலம் அப்பாடசாலையில் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

08. தற்போது கடமையாற்றும் பாடசாலையில் அதிபராக 03 வருட சேவையை நிறைவு செய்திருத்தல் வேண்டும். பொருத்தமான அதிபர் தரத்தினுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் **கொண்டிராதவர்களுக்கு** இது பொருத்தமற்றது.

<u>**புள்ளித் திட்டம்**</u>

**இலங்கை கல்வி நிர்வாக சேவை**

**01.சேவை மூப்பு**

| | |
|---|---|
| இ.க.நி.சே வகுப்பு I | வருடம் ஒன்றுக்கு 6 புள்ளிகள் |
| இ.க.நி.சே வகுப்பு II | வருடம் ஒன்றுக்கு 4 புள்ளிகள் |
| இ.க.நி.சே வகுப்பு III | வருடம் ஒன்றுக்கு 02 புள்ளிகள் |

**02 மிகக் கஷ்ட/கஷ்ட பிரதேச சேவைக்காலம் (இ.க.நி. சேவைக் காலத்தில்)**

| | |
|---|---|
| மிகக் கஷ்ட பாடசாலை சேவைக்காலம் | வருடம் ஒன்றுக்கு 01 புள்ளி |
| கஷ்ட பாடசாலை சேவைக்காலம் | வருடம் ஒன்றுக்கு ½ புள்ளி |

**ஆகக் கூடியது 10 புள்ளி**

**03. கல்வித் தகைமை (ஆகக்கூடியது ஒன்றிற்கு மாத்திரம்)**

| | |
|---|---|
| முதுமாணி | 10 புள்ளி |
| வகுப்புச் சித்தியுடனான பட்டம் | 08 புள்ளி |
| பொதுப் பட்டம் | 06 புள்ளி |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்/கல்விக் கல்லூரி டிப்ளோமா | 04 புள்ளி |

**ஆகக் கூடியது 10 புள்ளி**

**04.தொழிற்றகைமை (ஆகக்கூடியது ஒன்றிற்கு மாத்திரம்)**

| | |
|---|---|
| கலாநிதி பட்டம் (கௌரவப் பட்டம் அல்லாத) | 10 புள்ளி |
| கல்வி முதுமாணி/ தத்துவமாணி | 08 புள்ளி |
| பாடசாலை மேற்கல்வி முகாமைத்துவ டிப்ளோமா / பட்ட மேற்கல்வி டிப்ளோமா | 06 புள்ளி |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்/கல்விக் கல்லூரி டிப்ளோமா | 04 புள்ளி |

**ஆகக் கூடியது 10 புள்ளி**

**இலங்கை அதிபர் சேவை**

**1. சேவை மூப்பு**

| | |
|---|---|
| 1.இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 | வருடம் ஒன்றுக்கு 03 புள்ளிகள் |
| 2.இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 | வருடம் ஒன்றுக்கு 02 புள்ளி |
| 3.இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 | வருடம் ஒன்றுக்கு 1 புள்ளி |

**02 மிகக் கஷ்ட/கஷ்ட பிரதேச சேவைக்காலம் (முழுச் சேவைக் காலத்தில்)**

| | |
|---|---|
| மிகக் கஷ்ட பாடசாலை சேவைக்காலம் | வருடம் ஒன்றுக்கு 01 புள்ளி |
| கஷ்ட பாடசாலை சேவைக்காலம் | வருடம் ஒன்றுக்கு ½ புள்ளி |

**ஆகக் கூடியது 10 புள்ளி**

**03. மொழித் தேர்ச்சி**

**O/L ஆங்கிலம்**

| பழைய பாடத் திட்டம் | புதிய பாடத் திட்டம் | |
|---|---|---|
| D - 04 புள்ளி | A - 04 புள்ளி | 05 புள்ளி |
| C - 03 புள்ளி | B - 03 புள்ளி | |
| S - 01 புள்ளி | C - 02 புள்ளி | |
| | S - 01 புள்ளி | |

**A/L ஆங்கிலம்** (பிரதான பாடம்) 05 புள்ளி

**வேறு தகைமை**

உ+ம்:-ஆங்கில டிப்ளோமா (2 வருட டிப்ளோமா இலங்கை 05 புள்ளி
உயர் தொழில்நுட்ப நிறுவனம் /பல்கலைக்கழகம்

**2 ஆம் மொழி சிங்களம்/தமிழ்**

| பழைய பாடத் திட்டம் | புதிய பாடத் திட்டம் |
|---|---|
| D - 05 புள்ளி | A - 05 புள்ளி |
| C - 03 புள்ளி | B - 03 புள்ளி |
| S - 01 புள்ளி | C - 02 புள்ளி |
| | S - 01 புள்ளி |

**உயர் தகைமை மட்டும் கருத்தில் கொள்ளப்படும்**

**ஆகக் கூடியது 10 புள்ளி**

**04. கல்வித் தகைமை (ஆகக்கூடியது ஒன்றிற்கு மாத்திரம்)**

| | |
|---|---|
| முதுமாணி | 10 புள்ளி |
| வகுப்புச் சித்தியுடனான பட்டம் | 08 புள்ளி |
| பொதுப் பட்டம் | 06 புள்ளி |
| க.பொ.த (உ/த) | 04 புள்ளி |

**ஆகக் கூடியது 10 புள்ளி**

**05. தொழிற்றகைமை (ஆகக்கூடியது ஒன்றிற்கு மாத்திரம்)**

| | |
|---|---|
| கலாநிதி பட்டம் (கௌரவப் பட்டம் அல்லாத) | 10 புள்ளி |
| கல்வி முதுமாணி/ தத்துவமாணி | 08 புள்ளி |
| பாடசாலை மேற்கல்வி முகாமைத்துவ டிப்ளோமா / பட்ட மேற்கல்வி டிப்ளோமா | 06 புள்ளி |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்/கல்விக் கல்லூரி டிப்ளோமா | 04 புள்ளி |

**ஆகக் கூடியது 10 புள்ளி**

**06. செயலாற்றுகைகள்**

அ) பரீட்சைப்பெறுபேறுகள்(இறுதியான 05 வருடங்களுக்கு ஒரு சந்தர்ப்பம்)

| | | | |
|---|---|---|---|
| க.பொ.த(உ.த) | ~ | 75% மேல் சித்தி | ~05 புள்ளிகள் |
| | ~ | 50% மேல் சித்தி | ~03 புள்ளிகள் |
| க.பொ.த(சா.த) | ~ | 75% மேல் சித்தி | ~03 புள்ளிகள் |
| | ~ | 50% மேல் சித்தி | ~02 புள்ளிகள் |

பெறுபேறுகள்யாவும் வலயக்கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**ஆகக் கூடியது 10 புள்ளி**

ஆ) ஆக்கங்கள், செயற்றிட்டங்கள், கௌரவம்

I. பாடசாலை செயற்றிட்டங்கள்,
II. மாணவர் அபிவிருத்தி செயற்றிட்டங்கள்,
III..சமூக அபிவிருத்தி செயற்றிட்டங்கள்,
IV.தேசிய மட்ட கௌரவம், மெச்சிதழ்கள்
v. ஆளுமை திறன்விருத்தி

} ஒவ்வொன்றிற்கும் 2 புள்ளி வீதம்

**ஆகக் கூடியது 10 புள்ளி**

**பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்**

01. புதிதாக நியமனம் பெறும் அதிபர்களுக்கு சேவை நிலையம் வழங்கும் அதிகாரம், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கே உரியது.

02. தரம் II, தரம் III பாடசாலை வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் மாகாணக்கல்விப் பணிப்பாளரினாலும், தரம் 1AB(Super), 1AB,1C பாடசாலை வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் மாகாணக் கல்விச் செயலாளரினாலும் கோரப்படல் வேண்டும்.

03. வேறு மாகாணம்/மாவட்டம்/வலயங்களிலிருந்து இடமாற்றம் பெற்றுவரும் அதிபர்கள் அவர்களின் அதிபர் தரத்திற்கேற்ப வெற்றிடமுள்ள பாடசாலைக்கு மாகாணக் கல்விச் செயலாளரினால் நியமிக்கப்படல் வேண்டும். அவர்களுக்கு நேர்முகப் பரீட்சை தேவையில்லை.

04. தேசிய பாடசாலைகளில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் வட மாகாணப் பாடசாலைக்கு முறையாக விடுவிப்பு பெற்றிருக்க வேண்டும்.

05. தரம் II, தரம் III பாடசாலை அதிபர் விண்ணப்பங்களை அட்டவணைப்படுத்திய பின்னர் மாகாணக்கல்விப் பணிப்பாளரை தலைவராகவும் மாகாணக்கல்வி அமைச்சு/மாகாணக்கல்வித் திணைக்களம்/வலயக் கல்வி அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரையும் கொண்ட நேர்முகத்தேர்வுச் சபையை மாகாணக்கல்விச் செயலாளரின் அனுமதியுடன் அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

06. 1AB(Super),1AB,1C பாடசாலை அதிபர் விண்ணப்பங்களை அட்டவணைப்படுத்திய பின்னர் மாகாணக் கல்வி அமைச்சு செயலாளரை தலைவராகவும்/மாகாணக் கல்வித் திணைக்களம்/வலயக் கல்வி அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரையும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரையும் கொண்ட நேர்முகத்தேர்வுச் சபையை அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

07. மாகாணத்துக்குரிய சகல பாடசாலைகளுக்கான சேவை நிலையத்தை வழங்கும் அதிகாரம் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு மட்டுமே உண்டு.

08. ஆகக் குறைந்தது மூன்று (03) மாதங்களுக்குள் வெற்றிடம் ஏற்படும் சகல பாடசாலைகளுக்கும் ஒரேதடவையில் விண்ணப்பம் கோரப்படல் வேண்டும்.

09. குறித்த பாடசாலையின் தரத்திற்குரிய அதிபர் தரத்தைக் கொண்டிராதவர்களுக்கு சேவை நிலையத்தை வழங்கும் போது அடுத்த தரத்தில் உள்ளவருக்கு **'பதில் அதிபர்'** என்றபதத்துடனும் ஏனையவர்களுக்கு **'கடமைகளை கவனிக்கும் அதிபர்(Cover-up)'** என்ற பதத்துடன் கடிதம் வழங்கப்படல் வேண்டும்.

10. குறித்த பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் அதிபரின் செயலாற்றுகை திருப்தியளிக்காவிடின் அவரை உடனடியாக பாடசாலையில் இருந்து அகற்றுவதற்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

11. பதில் அதிபர் / கடமைகளை கவனிக்கும் அதிபர்(Cover-up) நியமனத்தின் போது முதலாம் ஆண்டில் அதே பாடசாலையில் தகுதிகாண் நிலையில் வைத்திருக்கப்படுவர். செயலாற்றுகை திருப்தியளிக்காவிடின் காரணம் கூறப்படாது அவரை அகற்றுவதற்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

12. இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயலாளரினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதியானதாகும். இச்சுற்று நிருபம் 2015.06.01 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

**இ.இரவீந்திரன்,**

செயலாளர்.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்